இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும்
நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் 2
இறுதிப் பரீட்சை – 2018
MCC1201 –தொழிலுரிமைத்துவம்

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி: 20.10.2018 நேரம்: 10.00 மு.ப– 12.00 மதியம்

அறிவுறுத்தல்கள்:

- *எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடை எழுதுக.*
- *எல்லா வினாக்களும் சம புள்ளிகளைக் கொண்டுள்ளன.*
- *விடை முறைமையாகவும், புத்தி கூர்மையுடையதாகவுமிருத்தல் வேண்டும்.*

1. a. தொழிலுரிமைத்துவக் கோட்பாட்டை உங்களின் சொந்த வாக்கியங்களில் விளக்குக. (05 புள்ளிகள்)

   b. உங்கள் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட தொழிலுரிமையாளர் ஒருவரை உதாரணமாகப் பயன்படுத்தி, ஒரு தொழிலுரிமையாளராக வருவதற்கு ஏதுவாகவுள்ள பின்னணிக் காரணிகளை ஆராய்க. (10 புள்ளிகள்)

   c. ஒரு தொழிலுரிமையாளராக நீங்கள் தெரிவு செய்துள்ள வணிகத்தைக் குறிப்பிடுக. நீங்கள் தெரிவு செய்துள்ள வணிகத்தின் தூர நோக்கு, இலட்சிய நோக்கு, குறிக்கோள்கள் ஆகியவற்றை விபரிக்குக. (10 புள்ளிகள்)

2. "குறிக்கோளை அடைவதற்கு ஆபத்திற்கு ----முகம்–கொடுத்தல், முயற்சி எடுத்தல் என்பன தொழிலுரிமையாளரின் பண்புகளாகும்". மேற் குறிப்பிட்ட கூற்றையிட்டு உங்களின் கருத்து யாது? குறிப்பான உதாரணங்களைத் தருக. (25 புள்ளிகள்)

3. "இலங்கையில் பிரதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் சிறிய வணிகம் மிக முக்கியமான வகிபாகத்தை வகிக்கின்றது".

   a. சிறிய வணிகம் ஒன்றின் பொதுவான பண்புகள் யாவை? (05 புள்ளிகள்)

   b. உங்கள் கருத்தில், "சிறிய வணிகமாக" இருப்பதன் அனுகூலம் யாது? (10 புள்ளிகள்)

   c. இலங்கையில் தற்போதைய சூழலில் சிறிய வணிகம் எவ்வாறு முக்கியமாகவுள்ளது? (10 புள்ளிகள்)

4. நீங்கள் தயாராகவிருந்தால், சிறிய வணிகம் ஒன்றை ஆரம்பித்து, நடாத்துவது ஒரு "பெரிய காரியமாகாது" என க.பொ.த (சா/த) கற்ற உங்களின் நண்பரொருவர் கூறுகின்றார். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும் நிகழ்ச்சித் திட்டத்தை கற்ற மாணவராகிய நீங்கள், உங்கள் நண்பரின் கூற்றுக்கு கூறும் பதில் யாது? உங்களின் விடையை உங்களின் அனுபவத்தைக் கொண்டு விபரிக்குக. (25 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றிக்கு சிறு குறிப்புக்களை எழுதுக.

a. வணிக நெறிமுறைகள் (Business Ethics)
b. தொழிலுரிமைத்துவ கலாச்சாரம் (Entrepreneurship Culture)
c. SWOT பகுப்பாய்வு
d. சிறிய வணிகமொன்றுக்கு வணிக பதிவு முக்கியமானது
e. தனிப்பட்ட தொழிலுரிமைத்துவ பண்புகள் (PEC)

(5x 5 = 25 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)